ஸ்ரீ வ. வே. ஸு. ஐயர் இலக்கியம்-2

புரட்சிவீரர் பாரிஸ்டர்

மகரிஷி ஸ்ரீ வ. வே. ஸு. ஐயர்

எழுதிய

காவிய உத்தியானம்

★

(ஸ்ரீ ஐயர் சரித்திர சுருக்கமும் அடங்கியது)

★

அவர் பிறந்த

99ஆவது ஆண்டு நிறைவில் வெளியிடப்பட்டது.

2—4—1980

★

டாக்டர் வ. வே. ஸு. கிருஷ்ணமூர்த்தி

திருவானைக்கோயில் (P. O.), திருச்சி-5.

பதிப்புரிமை] [விலை ரூ. 1-0

ஸ்ரீ ஐயரின் அரிய நூல்கள்

தமிழ்

1. கம்பராமாயணச் சுருக்கம்
2. புக்கர் வாஷிங்டன் சரித்திரம்
3. சந்திரகுப்த சக்கரவர்த்தி சரித்திரம்
4. குருகோவிந்த சிங்கன்
5. கரிபால்டி சரித்திரம்
6. மாஜினி சரித்திரம்
7. மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள்
8. பிரயோக இலக்கணம்
9. அகஸ்தீன் முனிவரின் விண்ணப்பம்.

ஆங்கிலம்

1. **The Kural or Maxims of Thiruvalluvar.**
2. **Kambaramayanam** — *A Study*
   (Published by Bharathia Vidya Bhavan, Bombay)
3. **Kurunthogai.**

ஸ்ரீ வ. வே. ஸு. ஐயர் இலக்கியம்-2

புரட்சிவீரர் பாரிஸ்டர்

மகரிஷி ஸ்ரீ வ. வே. ஸு. ஐயர்

எழுதிய

காவிய உத்தியானம்

(ஸ்ரீ ஐயர் சரித்திர சுருக்கமும் அடங்கியது)

★

அவர் பிறந்த

99ஆவது ஆண்டு நிறைவில் வெளியிடப்பட்டது.

2—4—1980

★

டாக்டர் வ. வே. ஸு. கிருஷ்ணமூர்த்தி

திருவானைக்கோயில் (P. O.), திருச்சி-5.

பதிப்புரிமை] [விலை ரூ. 1-00

மகரிஷி ஸ்ரீ வ. வே. ஸு. ஐயர்

தோற்றம் **2–4–1881** *மறைவு* **3–6–1925**



வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர், வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

The Householder who liveth as he ought to live
will be looked upon as a God among men.

—Translation by V. V. S. Iyer.

புரட்சிவீரர் பாரிஸ்டர்

மகரிஷி ஸ்ரீ வ. வே. ஸு. ஐயர்

வரகனேரி வேங்கடேச ஸுப்ரஹ்மண்ய ஐயர், கரூரை அடுத்த சின்னாளப்பட்டி என்ற கிராமத்தில், வேங்கடேச ஐயர் - காமாக்ஷி தம்பதிகளுக்கு 2-4—1881இல் மூத்த மகனாகப் பிறந்தார். வேங்கடேச ஐயர் எப். ஏ. யில் மாகாணத்தில் முதலாகத்தேறி, திருச்சி நகரப் பகுதியான வரகனேரியில் வர்த்தக சங்கம், ஜனோபகார நிதி முதலிய பாங்குகளை நடத்தி வாழ்ந்து வந்தார். பாலியத்தில் ஐயர் திருச்சி ஸெண்ட் ஜோஸப் கல்லூரியில் படித்து தன் 12ஆம் வயதில் மெட்ரிகுலேஷனிலும், 16ஆம் வயதில் பி. ஏ. யிலும் மாகாணத்தில் முதலாகத் தேறினார். அவரது 12-ம் வயதிலேயே அத்தை மகள் ஸ்ரீ பாக்யலக்ஷ்மியுடன் விவாகம் நடந்தேறியது.

பி. ஏ. முடித்த பின், சென்னைக்குச்சென்று படித்து, தன் 19-ஆம் வயதில் வக்கீலானார். 1905 வரை ஐந்து வருடங்கள் திருச்சியில் தொழில் நடத்தினார். இவரது அதிகூர்மையான நுண்ணறிவை வியந்து மகிழ்ந்த இவரது மைத்துனர்—"ரங்கூன் பசுபதி ஐயர்' எனப் பிரபலமாய் அழைக்கப்பட்டவர்.—இவரை பாரிஸ்டர் பரிக்ஷைக்கு இங்கிலாந்து அனுப்ப எண்ணி, ரங்கூனில் ஒரு பாரிஸ்டருடன் கூட்டுத் தொழில் நடத்த ஒரு வருடம் ஏற்பாடு செய்ததின் தொடர்ச்சியாக 1907-ல் ஐயரை லண்டன் அனுப்பிவைத்தார்.

லண்டன் சென்ற இருவாரங்களுக்கெல்லாம் ஐயருக்கு தீவிர பயங்கரவாதியும் தேசபக்தவீரருமான விநாயக தாமோதர சாவர்க்காருடன் மிக நெருக்கமான நட்பு ஏற்படவே, ச்யாம்ஜீக்ருஷ்ணவர்மா, விபின் சந்த்ர பால், லாலா ஹரிதயாள் முதலியோருடைய புரட்சிக் குழாத்துடன் ஒன்றிவிட்டார். ஆனாலும் படிப்பில் முயற்சி குன்றாமல்

(Roman Law) என்ற ரோமன் அரசியல் சட்டத்தில் முதலாகத்தேறி தங்கப் பதக்கமும் பெற்ருர். கிட்டத்தட்ட இந்தச் சமயத்தில், 1908ஆம் ஆண்டில் தென் ஆப்பிரிக்காவிலிருந்து லண்டன் சென்றிருந்த மகாத்மா காந்திஜியுடன் முதன் முதலாக ஐயருக்குத் தொடர்பு ஏற்பட்டது.

இந்தியர்களுக்கு இருந்த ஆழ்ந்த தேசபக்தியையும், வீரத்தையும், துணிச்சலையும் லண்டனிலேயே நிரூபித்துக் காட்ட எண்ணிய இந்த புரட்சிக்குழாம் விரும்பியதற்கேற்றவாறு ஓர் சந்தர்ப்பம் அமைந்தது. வங்காளப் பிரிவினையின்போது ஈவிரக்கமின்றிநடந்துகொண்ட சர் கர்ஸன் வைலி என்ற ஐ ஸி. எஸ். ஆபீஸரைப் பழிவாங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது. மதன்லால் திங்கரா என்ற பஞ்சாபி மாணவனைதேர்ந்தெடுத்து ஐயர் குறி தவருமல் சுடவும், அகப்பட்டுக்கொண்டால், போலீசாரால் சித்திரவதைக்குள்ளாளுலும், புரட்சி இயக்கத்தினரை காட்டி கொடுக்காமல் இருப்பதற்காக அவன் கை விரல் நகக்கண்களில் பலபல ஊசிகளை பலநாட்கள் திரும்ப திரும்ப ஏற்றி பரிசோதனை செய்த பின்னரே சுடுவதற்கு அனுமதி அளித்தார். அதன்படியே திங்கராவும் 1909-ஆம் வருடம் மே மாதம் 11-ஆம் தேதி வைலியை சுட்டுக்கொன்றதன் விளைவாக மரண தண்டனை விதிக்கப்பட்டு, புன்சிரிப்போடு தூக்குமேடை ஏறினர்.

மதன்லால் திங்கரா லண்டன் கோர்ட்டில் கொடுத்த வாக்குமூலம் அக்காலத்து இந்திய தேசபக்தர்களின் வீரத்திற்கும் திண்மைக்கும் ஓர் உதாரணமாய்த் திகழ்ந்தது. வாக்குமூலம் கூறியதாவது ;—

"நான் ஒரு ஹிந்து. மறுஜன்மத்தில் நம்பிக்கை உள்ளவன். ஆகையால் கோர்ட்டாரவர்களை நான் வேண்டிக்கொள்வது யாதெனில், என்னை எத்தனை சீக்கிரம் தூக்கிலிட முடியுமோ அத்துணைச் சீக்கிரம் தூக்கிலிடுங்கள். நான் மறுபடி மறுபடிப் பிறந்து, மறுபடி மறுபடி ஆங்கிலேயர்களைத் திரும்பத் திரும்பக் கொன்று என் தாய் நாடு அன்னிய ஆட்சியினின்று விடுதலை பெறும் வரை இவ்வித

மாகவே நடப்பேன். ஆங்கில அரசாங்கம் எனக்கு எவ்வித இரக்கமோ, மன்னிப்போ கருணையோ காண்பிக்க வேண்டாம் ... ..."

திங்கரா நிகழ்ச்சியின் விளைவாக சாவர்க்கார் கைதானார். பாரிஸ்டர் பாஸ் செய்திருந்த ஐயர், பட்டமளிப்பு விழாவில் "இங்கிலாந்தின் அரசனுக்கு, இந்தியனாகிய நான் ராஜவிச்வாசப் பிரமாணம் எடுத்துக் கொள்ள மாட்டேன்" என விழா ஹாலிலேயே உறுதியாக தீர்மானமான குரலில் மறுத்து வெளிவந்துவிட்டார். இதன் விளைவாக ஐயரையும் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. சாவர்க்கார், ஐயரை எவ்விதமேனும் இந்தியா தப்பிச்சென்று புரட்சிவேலையைத் தொடர்ந்து செய்யும்படி ஆலோசனை கூறினார். அதன்படியே ஐயர் பஞ்சாபி சீக்கியர் போல மாறுவேடம் பூண்டு, பிரான்சுக்குத் தப்பிச் செல்ல ரயிலில் போய்க்கொண்டிருக்கும் போது, அவரது கைப்பெட்டியில் எழுதப்பட்டிருந்த V. V. S. என்ற எழுத்தைக்கொண்டு இவர்தான் ஐயர் என ஊகித்த பிரிட்டிஷ் ஒற்றன் "V. V. S. ஐயரே! இதோ உங்களுக்கு ஒரு தந்தி" என்த் திடீரெனக் கூறி ஒரு தந்தியை ஐயரிடம் நீட்டினான் "நான் V. V. S. ஐயர் இல்லையே!" என ஐயர் மறுத்தார். ஆனால் ஒற்றனோ மஹா எத்தன்! ஐயரின் பெட்டிமீது எழுதியிருந்த "V. V. S." என்ற எழுத்தைக் காட்டி, "நீர்தான் V. V. S. ஐயரென இந்தப்பெட்டியே சாட்சி சொல்கிறதே!" என இடைமறித்தான், ஆனால் மகா சமயோசிதமாகவும், சாமர்த்தியமாகவும், பதட்டப்படாமலும், ஐயர் சாவதானமாக "அது வீர் விக்ரம் சிங்" என்ற என் பெயரைக் குறிக்கிறது? என்றார். ஒற்றன் அசந்தேபோனான் - ஏமார்ந்தும் போனான்.

பிரான்ஸ் தேசத்திற்குத் தப்பிச்சென்ற பின்னரும், ஐயரை பிரிட்டிஷ் ஒற்றர்கள் கடுமையாக கண்காணித்து வந்ததால், சிலமாதங்கள் ஐயர் பாரிஸிலேயே இருக்க வேண்டியதாயிற்று. அங்கு ராணா, காமா என்ற இரு பார்ஸி தேசபக்தர்கள் அவருக்கு ஆதரவாயிருந்தனர் ....

1910 – அக்டோபர் – 9ஆம் தேதி மாலை சூரியன் மறையும் நேரம் .. புதுச்சேரி துறைமுகத்தில் அப்பொழுது தான் வந்து நங்கூரம் பாய்ச்சி நின்ற கப்பலிலிருந்து இறங்கிய ஒரு முஸ்லீம் கனவான் சிறிய கைப்பெட்டி யுடன் வீதிகளில் விரைவாக நடந்துகொண்டே, மகா கவி சுப்ரமண்ய பாரதியாரை ஆசிரியராகக்கொண்டு, ஸ்ரீ. ஸ்ரீ. ஸ்ரீனிவாசாச்சாரியர் நடத்தி வந்த தேசீயப்பத்திரிகை "இந்தியா" காரியாலயம் உள்ள இடத்தை விசாரித்துக் கொண்டும், சற்றொரு நேரம் சுற்றும் முற்றும் எச்சரிக்கை யாகத் தன்னை யாரேனும் பின் தொடர்கிறார்களோ எனப் பார்த்துக்கொண்டும், சென்றுகொண்டிருந்தார். தான் தேடிவந்த இடம் அடைந்தவுடன் அந்த முஸ்லிம் கனவான், ஸ்ரீனிவாசாச்சாரியாரிடம் தான் ரோமாபுரியி லிருந்து அனுப்பிய மஹாகவி தாந்தேயின் "தெய்வீக நாடகம்" என்ற புஸ்தகம் வந்து சேர்ந்ததோ என வினவியபோதுதான், லண்டனிலும், பிரான்ஸிலும், கிரீஸி லும், எகிப்திலும் பிரிட்டிஷ் ஸ்காட்லண்ட் யார்டு ஒற்றர் களால் இடையறுது இரண்டு வருஷங்களுக்கு மேலாக கண்காணிக்கப்பட்டிருந்தும் லண்டன் முதல் புதுச்சேரி வரை 10,000 மைல்களுக்குமேல் பஞ்சாபி சிங் போலவும், முஸ்லிம் போலவும் பலபல மாறுவேடங்கள் பூண்டு வேடர் கள் எய்த அம்புகளுக்குத்தப்பி குகைக்குள் புகும் சிங்கம் போன்று வந்தவர் வ. வே. ஸு. ஐயரே என அவரது நண்பர்களால் புரிந்துகொள்ள முடிந்தது. அப்பொழுது ஐயருக்கு வயது 29–தான் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசியல் புகலிடமாக புதுச்சேரிக்கு ஏற்கெனவே பாபு அரவிந்தகோஷும், மஹாகவி பாரதியாரும் வந் திருந்தனர் இதில், அரவிந்தர் முழுமூச்சாக ஆன்மீகத் துறையிலேயே — அரசியலையெல்லாம் விட்டுவிட்டு — ஈடு பட்டுவிட்டார். ஆனால் பாரதியாரோ ப்ரவாகம் போன்ற தனது ஒப்பற்ற கவிதைகளால் தேசபக்திக் கனலை தமிழ் நாடெங்கும் ஜ்வாலைவிட்டெரியச் செய்தார். அடுத்தடுத்த வீடுகளில் வசித்த ஐயரும் பாரதியாரும் ஒவ்வொரு பேச்சும்

ஒவ்வொரு மூச்சும் தேசவிடுதலையைப் பற்றியும், நம் தேசத்து மகத்தான இலக்கியங்களைப் பற்றியும், பிற தேசத்தின் நூல்களைப் பற்றியும் மணிக்கணக்காக அலசிப் பேசுவர். பாரதியாரின் வேகம் கவிதா சமுத்திரமாக கொந்தளித்துப் பொங்கிற்று. ஐயரின் ஆவேசம் புக்கர் வாஷிங்டன், சந்திரகுப்தன், குருகோவிந்தசிங்கன், கரிபால்டி, மாஜினி போன்ற தேசபக்தர்களின் சரித்திரங்களாக சிறு கதை தொகுப்பாக, குறள், கம்பராமாயண ஆங்கில ஆராய்ச்சிகளாக மிளிர்ந்தது. ஆனால், செயல் வீரரான ஐயர், எரிமலை, பிழம்பைக் கக்குவதுபோன்று அவ்வப்பொழுது பயங்கர புரட்சிவேலையில் ஈடுபட்டார். தனது அத்யந்த அரசியல் நண்பர்களான, சுப்பிரமணிய சிவாவையும் வ. உ. சிதம்பரம் பிள்ளையையும் மிகக் கடுமையாக தண்டித்த திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் ஆஷை வஞ்சம் தீர்க்க அற்றம் பார்த்திருந்தார். அதற்கு ஏற்றாற் போல் தபால் துறையில் உத்யோகம் பார்த்துக் கொண்டிருந்த வாஞ்சிநாத ஐயர் திருநெல்வேலி கடையத்திலிருந்து, ஐயரைக்காண வந்தார். ஸ்பரிசவேதி தொட்டதையெல்லாம் தங்கமாக்குவது போன்று, ஐயர் தன்னைப் பரிபூர்ணமாக தேசத்திற்கே அர்ப்பணித்து மிகமிக எளிய வாழ்க்கை நடத்துவது கண்ட வாஞ்சிநாத ஐயர், தேசத்திற்காக தன் உடைமைகளையும், உயிரையும்கூட பாரத மாதாவின் திருவடிகளில் பலிதானமாக சமர்ப்பித்துவிட உறுதியளித்தார்.

குறிதவறாமல், கை நடுக்காமல் துப்பாக்கி சுடுவதற்கு, வாஞ்சிநாதய்யருக்கு ஐயர், பயிற்சியளித்தார்.

1911-ம் வருடம், ஜூன் மாதம் ஒரு நாள்
காலை மணி ஒன்பதுக்கு, மணியாச்சி ஜங்ஷனில்
வெளியூருக்கு அரசு அலுவலாக பிரயாணம் செய்து கொண்டிருந்த கலெக்டர் ஆஷ் தனது பிரத்யேக ரயில் பெட்டியில் ஆனந்தமாக காபி அருந்திக்கொண்டிருந்தார் திடீரென துப்பாக்கி குண்டு மூன்று அவர் உடலில் பாய்ந்து உயிரைக் குடித்துவிட்டது — என்ன நேர்ந்தது

என அவரதுமனைவி புரிந்துகொள்வதற்குள்மறுபடிமூன்று குண்டுகளின் சப்தம் குழுமியிருந்தவர்கள் காதில் கேட்டது சற்றுதூரத்தில் வாஞ்சிநாத ஐயரின் சடலம் கிடந்தது .. ஐயருக்கு வாக்குறுதி கொடுத்தபடியே, திருநெல்வேலி கலெக்டர் ஆஷைச்சுட்டுக் கொன்றவுடனே, தப்பிச்செல்ல எம்முயற்சியும் செய்யாமல் வாஞ்சி, தன்வாயிலேயே துப் பாக்கிக் குழலை வைத்துச் சுட்டுக் கொண்டார். தேசவிடு தலைப் போருக்காக ஒருவன் தன்னையே ப்ராணத்தியாகம் செய்தபெருமை தமிழ் நாட்டையே சாரும். நம் நாட்டில் புரட்சி சதியில் பலர் தூக்குமேடை ஏறி இருக்கின்றனர். ஆனால் வாஞ்சிநாத ஐயரைப்போல தானேதன்னை தேசத் திற்காக பலியிட்டுக் கொண்டவர் வேறு எவருமில்லை எனக் கூறலாம்.

முதல் மகாயுத்தம் 1914-1918 வருடங்களில் நடந்தது. ஆங்கில அரசாங்கம் தன் எதிரியான வ. வே. ஸு. ஐயரை புதுச்சேரியினின்றும் நாடு கடத்திவிடும்படி பிரான்ஸைக் கேட்டுக்கொண்டது. பிரஞ்சு கவர்மெண்டும், ஐயரை ஆப்பிரிக்க நாட்டு பிரெஞ்சு அல்ஜியர்ஸுக்கு அனுப்பி விடப்போவதாக அச்சுறுத்திவந்தது. அந்தக் கொந்தளிப் பான நாட்களில்தான், தமிழ் நாட்டுக்கு ஏதேனும்,-நாடு கடத்தப்படுமுன் – செய்துவிடவேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்த ஐயர் திருக்குறள் பூராவையும் ஆங்கில மொழிபெயர்ப்பு செய்து வெளியிட்டார்.

ஐயர்மீது எந்தக்குற்றமும் நிரூபிக்க இயலாத அரசு அவரை நாடு கடத்தும் யோசனையைக் கைவிட்டது. ஆனால் ஐயரோ, பற்பல தந்திரங்களால் துப்பாக்கிகளை யும் புரட்சி இலக்கியங்களையும், "கழுப்பெரும் பாக்கத்து ஐயங்கார்" என அழைக்கப்பட்ட ஒரு பரம தேசபக்தர் மூலம் நாட்டின் பல பகுதிகளுக்கு அனுப்பிக் கொண்டே இருந்தார்.

நாட்களும், மாதங்களும், வருடங்களும் ஓடின தேச பக்தியை எழச் செய்யும் நூல்களையும், உயர்ந்த இலக்கியப் படைப்புகளையும் ஐயர் வெளியிட்டு வந்தார். இதற்கிடை

யில் புதுச்சேரி வந்த மகாத்மா காந்தியுடன் ஐயருக்கு இரண்டாம் சந்திப்பு ஏற்பட்டது. தனது சொந்த வாழ்வில் பரிபூர்ணமான அஹிம்ஸாவாதியாக ஐயர் மாறினும் தேச சுதந்திரம் அடைவதற்காக பலாத்காரம் கையாள வேண்டியிருந்தால் அதையும் கையாண்டு விடுதலே பெறுவதுதான் ஒவ்வொரு தேசபக்த இந்தியனின் கடமை என்பதே இறுதிவரை அவர் கொள்கையாயிருந்தது.

1918–இல் முதல் உலக மகாயுத்தம் முடிந்ததை ஒட்டி 1920இல் எல்லா அரசியல் வாதிகளுக்கும் பொது மன்னிப்பு அரசு அளித்தது. அதன் விளைவாக ஐயர் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு வர அனுமதி வழங்கப்பட்டு, அவரும் 20—6—1920இல் புதுச்சேரியை விட்டு சென்னே வந்தார். அங்கு திரு. வி. கல்யாணசுந்தர முதலியாருக்கு அடுத்தபடியாக "தேச பக்தன்" என்ற தமிழ்த் தினசரிக்கு ஐயர் ஆசிரியராக அமர்ந்தார்.

ஆனல், எவ்விதமேனும் ஐயரை ஒருமுறையாகிலும் தனது சிறையில் வைக்க ஆங்கில அரசு ஆவலோடிருந்தது போல, அவர் எழுதாத ஒரு தலையங்கத்திற்காக ராஜத்வேஷ குற்றம் சாட்டப்பட்டார். ஐயரும், பத்திரிகைக்கு தான் ஆசிரியர் என்ற முறையில் அக்கட்டுரைக்குத் தானே பொறுப்பேற்று 9-மாதம் சிறைசென்ருர். அவ்வாறு அவர் பெல்லாரி சிறையிலிருந்தபோது தான் ஆங்கிலத்தில் கம்பராமாயண ஆராய்ச்சி எழுதினர். அதில் சுமார் 4000 கம்பன் பாக்களே (16000 அடிகள்) ஆங்கிலக் கவிதைகளாகவே புனேந்து, உலகில் எல்லா பாஷையிலும், எல்லா தேசத்திலுமுள்ள கவிகளுக்கெல்லாம் மிகவும் உயர்ந்தவன் கவிச்சக்கிரவர்த்தி கம்பனே என சாங்கோபாங்கமாக சீர் தூக்கி அறுதியிட்டுக்கூறுகிருர்.

சிறையிலிருந்து வெளிப்போந்தபின், 1922–இல் கவி தாகூரின் சாந்திநிகேதனமும், ஹரித்வாரத்தில் சுவாமி சரத்தானந்தா நடத்திய குருகுலமும் ஒருங்கிணேந்து போன்ற ஒரு அமைப்பை அமைக்க எண்ணி, திருநெல்

வேலி ஜில்லா சேரன்மகாதேவியில் "தமிழ்க் குருகுலம் - பாரத்ராஜ ஆசிரமம்" ஸ்தாபித்தார். ஆன்மீகமும் தேசியமும் பிணைந்த தேசத்தொண்டுக்கு இளைஞர்களைப் பயிற்றுவிப்பதே அதன் நோக்கம்" என ஐயர் தன் அறக் கட்டளையில் குறிப்பிடுகிறார்.

வெகு வருஷங்களுக்குப் பிறகு மகாத்மா காந்தி உருவாக்கிய வார்தா கல்விதிட்டம்போன்றதை குருகுலத்தில் ஐயர் 1923-லேயே நடைமுறைக்குக் கொணர்ந்தார். எல்லா மாணவரும், நூற்றல், நெய்தல், தச்சு, செங்கல் அறுத்தல் கட்டிடம் கட்டல், பயிரிடுதல் முதலியன கற்றனர். தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, சம்ஸ்கிருதம், தெலுங்கு மொழிகளும் சொல்லிவைக்கப்பட்டன. அச்சிடும் தொழில், சித்திரம், தேகப்பயிற்சி, அம்பு எய்வது கற்றுத் தரப்பட்டன. இடையிடையே பாரதியாரின் தேசவீரப் பாட்டுகளைப்பாடிக்கொண்டு ஊரூராகச்சென்று மாணவரும் ஆசிரியர்களும் தேச உணர்ச்சிகளை வளர்த்தனர்.

இதே சமயம் ஐயரின் அந்தரங்க நோக்கமான, கொரில்லா புரட்சி முறைகள் சற்றுமுதிர்ந்தவர்களுக்கு புகட்டப்பட்டது. துப்பாக்கி சுடல், வெடிகுண்டு தயாரித்தல், சங்கேத பாஷை அறிதல் முதலியனவற்றிற்கும் இதில் பங்கு இருந்தது. இரவோடிரவாய் வந்துசேரும் துப்பாக்கிகளும், தடைசெய்யப்பட்ட பிரசுரங்களும் கைகள் மாறி வெளி மாகாணங்களுக்கும் அனுப்பப்பட்டன. கட்டபொம்மனின் ஜில்லாவான திருநெல்வேலிதான் இவ்வித காரியங்களுக்கு ஏற்றது என நினைத்தே ஐயர் குருகுலத்தை அங்கு ஸ்தாபித்தார்.

இலக்கிய இயக்கமும், தேசீய இயக்கமும் பிணைந்து நின்ற இந்த ஸ்தாபனத்து மாணவர்களுக்கு இயற்கைக் காட்சிகளைக் காண்பிக்க ஒரு சுற்றுலா அம்பாசமுத்திரம் பாபநாசம் அழைத்துச்செல்லப்பட்டது. அவர்களோடு தானும் இருக்கவிரும்பி ஐயர் 3—6—1925 கல்யாண தீர்த்தம் என்ற அருவிக்கு போந்தார். அதிவேகமாகப் பாய்ந்து

செல்லும் குறுகிய ஆழமான பகுதியைக் கடக்கையில் ஐயர் மகள் சுபத்திரை நதியில் தடுக்கிவிழுந்துவிட்டாள். அவளைக்காப்பாற்ற ஐயரும் குதித்தார். ஆனால் ப்ரவாகந் தின் வேகம் இருவரையும் இழுத்துச்சென்று உயிரைப் பருகிவிட்டது. இவ்விதம் முடிந்தது இந்த மஹா புருஷனின் வாழ்க்கை – அவரது 44-ஆம் வயதில், கடல் களையெல்லாம் நீந்திக்கடந்த வீரரை, கல்யாணதீர்த்தம் தன்னிடம் ஐக்கியப்படுத்திக் கொண்டுவிட்டது.

ஐயர் மறைந்தபோது மகாத்மா எழுதினர் :

பல வருஷங்களுக்கு முன்னர் ஐயரை நான் லண்டனில் சந்தித்தபோது அவர் மிக பயங்கரமான புரட்சிக் காரரா யிருந்தார். பிற்காலத்தில் அவர் மென்மையும் சாந்த குணமும் உள்ளவரானர். ஆயினும் அவரது தேசபக்திக் கனல் எப்பொழுதும்போலவே கொழுந்துவிட்டு எறிந் தது ... அவரை மிகமிக உண்மையான, தன்னலமற்ற ஒரு தேசபக்தர் எனக் கருதுகிறேன் ...

சாவர்க்கார் பிரலாபித்தார் :—

ஸ்ரீ ஐயர் அவர்கள் இணையற்ற தீரர். ஒரு மாபெரும் தபஸ்வி — மஹான் — மேதை — சீலம் மிக்கவர். பண்பு என்ற சொல்லுக்கே இலக்கணமாய் அமைந்தவர். நெருப்புப்போன்ற ஒழுக்கம் உள்ளவர், லண்டனில் நாங் கள் யாவரும் அவரை "ரிஷி ஐயர்" என்றே அழைத் தோம். தேசபக்திக்கும் தியாகத்திற்கும் வீரத்திற்கும் இந்தியாவிலேயே அவர் ஒரு எடுத்துக்காட்டாக இருந் தார். அவர் மஹாயோகீச்வரர். அக்னிப் பிழம்பை அடக்கி வைத்திருக்கும் எரிமலை போன்றவர். மனித உருவில் உலகில் உலவிவந்த தெய்வம். கல்வியைக் கரை கண்டவ ராகினும், கல்விச்செறுக்கே அற்றவர். அன்பு அவரது மென்மையான இதயத்தின் நாதம். வீரம் அவர் கண் களில்வீசிய ஒளி ... ...

முற்றும்

காவிய உத்தியானம்

புரட்சி வீரர்

பாரிஸ்டர் **ஸ்ரீ வ. வே. ஸு. ஐயர்** *எழுதியது*

சாமானிய ஜனங்களுக்கு நித்திரைச் சுகத்தையும் காதற் சுகத்தையும் விட்டால் வேறு சுகங்களின் சுவை தெரிவது கிடையாது. பயிற்சி சிறிது பெற்றவர்கள் கான சுகத்தை அனுபவிப்பார்கள். அதனினும் சிறிது அதிகமான பயிற்சி பெற்றவர்கள் சித்திரங்களையும் சிற்பங்களையும் பார்த்து ஆனந்தமுறுவார்கள். ஆனால் நூல்களை — உயர்ந்த ரஸம் நிறைந்த நூல்களை அனுபவிக்கத் தெரிந்தவர் மிகவும் சிறு தொகையினரேயாவர். உயர்ந்த நூல்கள் அறிவாளிகளுக்குத் தரும் சுகத்திற்கு மற்றைய சுகங்கள் எள்ளளவும் ஈடாகா. மற்ற ஒவ்வோர் சுகங்களும் எப்பொழுதும் அனுபவிக்கத் தகுந்தன அல்ல - நசுவரமானவை - சீக்கிரம் தெவிட்டிப் போவன - ஓர் அளவுக்கு மேல் சென்றுவிட்டால் அவை பெரும் கஷ்டத்தைத் தந்துவிடும். ஆனால் நூற்சுவையோ எப்பொழுதும் அனுபவிக்கலாம்: நவில் தொறும் செவ்விய நூல்களின் நயம் வளர்ந்து கொண்டே போகும். நூல்களை அளவுக்கு மிஞ்சிப் படித்துக் கெட்டவரை நாம் பார்த்ததில்லை. மகா ரஸிகனான உமர் கையம் (Omar Khayyam) என்பவன் ஒரு பெயர்போன கவியில் சுகவெறியைப் பூரணமாக அனுபவிப்பதற்கு ரமணீயமான உத்தியானத்தில் ஓர் கலசம் நிறைய மதுவும், காந்தை ஒருத்தியும், ரஸமுள்ள ஓர் நூலும் தேவை என்று எழுதுகிறான். நூல்களில் பொதிந்துள்ள சுவையைப்பற்றி சமஸ்கிருதக் கவிகளும் தமிழ்க் கவிஞர்களும் வேண்டிய அளவுக்குப் புகழ்ந்திருக்கிறார்கள்.

சிசுர் வேத்தி பசுர் வேத்தி
வேத்தி கானரஸம் ப்ஹணீ
ஸாஹித்ய ரஸ மாத்ஹுர்யம்
சங்கரோ வேத்தி வா ந வா

என்றும்,

ஸுப்ஹாஷித ரஸாஸ்வாத
ஜாத ரோமாஞ்ச கஞ்சுகா:
விநாபி காமிநீ ஸங்கம்
கவய : ஸுக்ஹம் ஆஸதே.

என்றும்,

திரைகொண்ட தண் கடலில்
வரும் அமுத பாகமாய்த் தேசப்ரசித்தியாகச்
செப்பும் ஒரு கவிகொண்டு குலம் எல்லாம் வந்து
அடிமை செயினும் அதுநிகராகாது காண்!

என்றும்,

தெள் அமிர்த தாரை என
மதுரம் கதித்த பைந்தேன்
மடை திறந்தது எனவே
செப்பும் முத்தமிழ்,

என்றும்,

நம் நாட்டு அறிஞர் அனுபவித்துக் கூறியுள்ளார், இவ்வாறு மூதறிஞர் அளவு கடந்து புகழ்ந்து கூறும் காவிய ரஸாமிருதத்தை இக்காலத் தமிழரும் வருங்காலத் தமிழரும் மனமுற மாந்தித் திளைக்க வேண்டும் என்று இக்கட்டுரையில் உலகத்தின் பல்வேறுபட்ட காவியங்களின் கூட்டத்தை ஸ்வயம்வர மண்டபத்தில் சேடிகள் ராஜகுமாரிக்கு ஒவ்வோர் மன்னனுடைய குணங்களையும் வர்ணித்துக் கூறுவதுபோல சுருக்கமாக வர்ணிக்க விரும்புகிறேம்.

காவிய உலகமாகிற உத்தியானத்தில் எந்த மலரின் அழகைப்பற்றி முதன் முதலாகப் பேசுகிறது என்று நமக்குத் தெரிகிறதேயில்லை. கம்பன் சீதையின் அழகை வர்ணிக்கையில்,

அஞ்சொற்கள் கிள்ளைக்கு எல்லாம்
அருளினுள் அழகை மாந்தி
தம் சொற்கள் குழறி தத்தம்
தகை தடுமாறி நின்றார்,

என்றும்,

இழைகுலாம் முலையினாளை,
இடை உவாமதியின் நோக்கி
மழைகுலாவு ஓதி நல்லார்
களிமயக்குற்று நின்றார்.

என்றும் சொல்லுகின்றான். அப்படியே எம்முடைய மனம் காவியக் களஞ்சியமாகிற நறுமலரிடத்தின் பேரழகுகண்டு ஸ்தம்பித்துவிடுகிறது. இருப்பினும் அதை மெல்லச் செல்லவிடுவோம்.

மகா காவியங்களை நினைத்தோமானால் அவை எம் மனத்தை ஆகருஷித்துக்கொண்டு மலைகள் மீதும் வன மத்தியிலும், கடலிலும் வானிலும், சுவர்க்கத்திலும், நரக லோகத்திலும், அசுர ராக்ஷஸர்களுடைய கம்பீரமான மனோலோகத்திலும் தீரோதாத்த நாயகர்களுடைய சாந்த சக்தி நிரம்பிய இருதயங்களுக்குள்ளும் அதிவேகமாகப் பாய்ந்து செல்லுகின்றன. நாடகங்களை ஸ்மரித்தோமானால் விக்ரமார்க்கன் சபைக்கும் ஒலிம்பியாவின் (Olympia) சோலைகளுக்கும் ஆதென்ஸ் (Athens) லண்டன் பாரிஸ், மதுரீது (Madrid) ரோமாபுரி, முதலிய நகரங்களுக்கும், கண்ணுவரிஷியின் ஆசிரமத்துக்கும், வால்மீகியின் தபோவனத்துக்கும், பேய்களும் பிசாசங்களும், கொக்கரிக்கும் ஸ்மசானத்துக்கும் ஜூலியத்தின் (Juilet) கன்னிகாமாடத்துக்கும், ஒராஸியர் (Orosius) வென்ற யுத்தகளத்துக்கும், அரசனுடைய அந்தகாரம் நிறைந்த அறைக்கும், சித்திரை அருச்சுனனோடு வாழ்ந்த நந்தனவனத்துக்கும் நமது மனம் ஓடிவிடுகிறது. கதைகளை நினைப்போம் என்றாலோ, மனது துருக்கிஸ்தானத்தினின்று காமராஜனைத் தூக்கிக் கொண்டு சீனத்தில் பதூராவின் அரண்மனையில் கொண்டு

போய்விட்டு விடுகிறது; அமிஞவோடு கள்ளர்களை எண்ணெயில் பொரிக்கிறது, மதனகாமராஜனோடு ராஜ்ஜியம் ராஜ்ஜியமாய்ச் சுற்றுகின்றது. பத்து அரசிளங் குமரர்களோடு திரைகடல் தாண்டுகிறது. பொக்காஸியோவுடன் (Boccacio) பத்து இரவும் விழிக்கிறேன் என்கிறது: சாஸருடைய (Chaucer) யாத்ரீகர்களோடு குதிரையேறிச் செல்கிறது. ஆனால் முதலில் ஸ்தம்பித்துப்போயிருந்தும் இப்போது கட்டுக்கயிற்றை அறுத்துக்கொண்டு ஓடும் மனதை அரிதில் நிறுத்தி முறையாகச்செல்லச் செல்லுவோம்.

முதன் முதலில் வேதங்களையே கவனிப்போம். மனித ஜாதி தேவ துல்லியமாக இருந்தகாலத்தில் தோன்றிய வாக்குகளாகும் இவை. இவைகளுள் ஒவ்வொன்றையும் பற்றி அது மனிதனால் எழுதப்பட்டதன்று, சாக்ஷாத் ஈசுவரனாலேயே திருவாய் மலர்ந்தருளப் பெற்றது என்று அதனைப் பயிலும் வகுப்பினர் கூறுவர். மனித ஜாதி வேதங்களென்று மதித்துப் பிரத்யேகமாக வைத்திருக்கும் நூல்கள் ஒவ்வொன்றும் - ஒவ்வொரு ஜாதியும் மற்ற ஜாதியாரின் வேதங்களைப்பொய் நூல்களென்று அவமதித்தாலும் - கடவுளின் திருவாக்கு எனக் கூறத்தகுந்தவையே. நமது வேதங்களை ஆரிய ஜாதியின் அபிபக்த மாபிதிரார்ஜித சொத்து என்பர் ஜெர்மானிய பண்டிதர்.

நிரதிசயமான ஆனந்தத்தை அனுபவிக்க வேண்டுமானால், குறுகிய இருதயங்கள் விரிய வேண்டுமானால், இருளடைந்த மனதில் கோடிசூர்யப் பிரகாசம் பிரவேசித்து அதை ஒளிபடுத்தவேண்டுமானால், மனிதர் ஆரியர்களுடைய வேதங்களையும் உபநிஷத்துகளையும் படிக்க: நம்மாழ்வாரின் வாக்கையும் அப்பருடைய அன்பு நிறைந்த தேவாரத்தையும் அனுபவிக்க: யூத நூல்களில் யோப்பையும் (Job) ஸாலொமானின் (Solomon) பேரழகுவாய்ந்த கானத்தையும் பயிலுக: கிருஸ்தவ நூல்களுள் நான்கு "சுவிஷேசங்க"ளோடு (Testaments) அவர்களுடைய கடைசிப் புஸ்தகமான பவிஷியத்திரிசனத்தையும (Revelations)

ஆழ்ந்து படிக்க! கடவுளிடம் பயம் நிறைந்த பக்தி வேண்டுமானால் முகமது நபியின் ஸுராக்களையும் குரு கோவிந்தசிங்கனுடைய சண்டிஸ்தோத்திரத்தையும், கட்க ஸ்துதியையும் சிரத்தையுடன் படித்திடுக! தயையினும் பிரேமையினும் ஆரோகண அவரோகணமனைத்தையும் தங்கள் இருதயமாகிற வீணையில் கேட்க விரும்புகிறவர்கள் என்னையாளுடைய ஐயன் புத்தனுடைய திரிபிடகத்தையும் உலக குருவான வர்த்தமான மஹாவீரனுடைய திருவாக்குகளையும் ஸ்ரீ பாகவதத்திலுள்ள பால கோபாலனுடைய திருவிளையாடல்களையும் ஆர்வத்தோடு கேட்கட்டும்! அறம் என்றைக்கும் வெல்லும், பாவம் என்றைக்கும் தோற்றேபோகும் என்கிற திடநம்பிக்கை வேண்டியவர்கள் ஜாரதுஷ்டிரனுடைய (Zoraster) மணிகள் போன்றவாக்குகளை ஆழ்ந்து படிக்கட்டும்.

ஆனால் மனிதன் ஸ்வச்சமான தேனையும் கரும்பையும் மாத்திரம் சாப்பிட்டுக்கொண்டு திருப்தி அடைந்துவிடுகிறதில்லை: பல்வேறுபட்ட பக்ஷியங்களையும் பணியாரங்களையும் விரும்புகிறான். ஒரே சுவையை வெகுநேரம் அனுபவித்துக்கொண்டிருக்கும் ஆற்றல் அவனுக்குக் கிடையாது அது அவனுக்கு சீக்கிரம் தெவிட்டி விடுகின்றது. அறுசுவையும் சுவையுடன் கலந்த உணவையும் பணியாரத்தையும் அடிக்கடி மாற்றிக்கொண்டு உண்பதே அவனுக்கு மிகுதியான சந்தோஷத்தைத் தருகிறது. அதேமாதிரி செவியுணவின் சுவையைறியும் ரஸிகர்கள் நானாவிதமான சுவைகளும் கலந்தமைந்திருக்கிற நூல்களையே பெரிதும் காமுறுகிறார்கள். அவர்களுக்குத்தான் மனித ஜாதி எத்தகைய விருந்து சமைத்து வைத்திருக்கின்றது!

ராமாயணமும் (வால்மீகியினதும், கம்பனதும்) பாரதமும் பாகவதமும், சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இலியாதும் (Iliad) ஒதூஸியமும் (Odyssey) ஏனையமும் (Aeneid) ஷாஹநாமாவும், லூஸியாதும் (The Lusiads) எருசலேம் மீட்ட காதையும் (Jerusalem Liberated) ஸ்வர்க்க நஷ்ட காவியமும் (Paradise Lost) தெவிட்டாத இன்னமுதமாய்

விளங்குகின்றன. ஆசிரியன் அரிஸ்தோத்தலன் (Airs-totle) மஹா காவியங்களைவிட திராகெதி (Tragedy) என்று சொல்லப்பட்ட கம்பீர நாடகங்களே சரஸ்வதி தேவியின் சூடாமணியென்று கூறத்தக்கவை என்று சொல்லுகிருன். சிறியதோர் சௌக்கத்துள் நவரஸங்களையும் பல்வேறு பட்ட மெய்ப்பாடுகளையும் சிறந்த கருத்துக்களையும் ஒன்றித்து, சாமானியமான வாழ்க்கையின் சிறுமைகளையெல்லாம் விட்டுவிட்டு உசிதமான உயர்வுகளைச் சுவையோடு வகுத்து வைத்து எல்லாவற்றிற்கும் ஜீவகளையையும், ஜீவ உணர்ச்சியையும், ஜீவவேகத்தையும் தந்து சம்பாஷணு ரூபமாகக் கற்பித்து வைக்கும் நூலே கம்பீர நாடகமாகும். சாகுந்தலமும், மாலதீ-மாதவமும், உத்தர ராம சரிதமும், மிருச்சகடிகையும், கம்பீர நாடகங்களே. இவற்றுள் சோக ரஸமும், வீரரஸமும் ஏற ஏற இவற்றின் காம்பீரியம் உயரும்.

கிரேக்கர்களுள் எஸ்கூலனும் (Aeschylus) ஸோபோகிளனும் (Sophocles) யூரிபெதனும் (Euripides) பிரெஞ்சுக்காரருள் கோர்னேயியும் (Corneille) ராஸீனும் (Racine) இத்தாலியருள் அல்பியேரியும் (Alfieri) இஸ்பானியருள் கால்தெரனும் (Calderon) ஜர்மானியருள் கஅதேயும் (Goethe) ஷில்லரும் (Schiller) ஆங்கிலேயருள் பிளெச்சரும் (Fletcher) ஷேக்ஸ்பியரும், மகோன்னதமான வீர நாடகங்களை எழுதியிருக்கிருர்கள். இவைகளோடு சேர்த்துச் சொல்லக்கூடிய நாடகங்கள் முற்காலத்திலாவது. இடைக்காலத்திலாவது தமிழில் எழுதப்பட்டன என்று சொல்வதற்கில்லை.

தற்காலத்தின் தான் ஸ்ரீமான் சம்பந்த முதலியாரும், அவருடைய நாடகங்களைப் படித்த பிறகு வேறு சிலரும் ஷேக்ஸ்பியரின் ஆதர்சத்தை வைத்துக்கொண்டு தமிழில் சில நாடகங்கள் எழுதியிருக்கிருர்கள். உயர்ந்த நாடக பரம்பரை இனித்தான் தமிழருள் தோன்றவேண்டும். ஹாஸ்ய நாடகங்களிலும் சில நாடகாசிரியர் அரிய வேலைகள் செய்து லோகோத்தரமான பெயர் எடுத்திருக்கிருர்கள். அரிஸ்தோபானன் (Aristophanes) என்ற கிரேக்கனும்,

மோலியேர் (Moliere) என்ற பிரெஞ்சுக்காரனும், கோல்த்ஸ்மித், (Goldsmith), ஷெரிதன் (Sheridan) என்ற ஆங்கிலரும், இத்தகைய நாடகம் புனைவதில் இணையற்றவர்கள். குப்பன் பித்தலாட்டங்கள் என்ற பேரோடு மோலியேரின் நாடகம் ஒன்று தமிழிலும் வந்திருக்கிறது. ஷேக்ஸ்பியர் ஹாஸ்ய நாடகம் எழுதுவதிலும் யாரினும் தாழ்ந்தவன் அல்லன் என்று காட்டிக்கொண்டிருக்கிறான். ஆனால் இதில் ஒன்று கிரேக்கரும் பிரெஞ்சுக்காரரும் ஐரோப்பாவிலுள்ள மற்ற நாட்டு நாடகாசிரியரும், கம்பீர நாடகங்களினிடையே ஹாஸ்ய ரஸத்தைக் கலவாமல் வீர, சோக, பயானக ரஸங்களையே சம்மேளித்து வைத்து அந்நாடகங்களை இயற்றியிருக்க, ஷேக்ஸ்பியரும் மற்ற ஆங்கில நாடகாசிரியரும் நம் நாட்டுக் காளிதாஸன், பவபூதி முதலியோரைப்போல் இவற்றுள்ளும் ஹாஸ்ய ரஸத்தை புகுத்தி வைத்திருக்கிறார்கள். உண்மையில் இவர்களுடைய நாடகங்களுக்கு மிசிர நாடகங்கள் என்றுதான் பெயர் வைக்கவேண்டும்.

பெருங்காப்பிய வகுப்பிலும் நாடக வகுப்பிலும் சேராமல் பலவகையான காவியங்கள் ரஸிகருக்கு விருந்து செய்கின்றன. இந்த ஸங்கர ஜாதி நூல்களுள் ஜீவக சிந்தாமணி, யங் (Edward Young) எழுதிய இரவுச் சிந்தனைகள் (Night Thoughts) போப் (Alexander Pope) எழுதிய குந்தலாபஹரணம் (Rape of the Lock) கௌபர் (William Cowper) எழுதிய கருமம் (Task) ஜான்சன் (Dr. Johnson) எழுதிய மனித ஆசையின் நிரர்த்தகம் (Vanity of Human Wishes) கிரே (Thomas Gray) எழுதிய பிரலாபம் (Elegy), காளிதாசன் எழுதிய மேகஸந்தேசம் உமர்கையம் எழுதிய ருபாயாத் (Rubaiyat) தாம்ஸன் (James Thomson) எழுதிய ருது சம்ஹாரம் (The Seasons), வொர்த்ஸ் வொர்த் (Words Worth) எழுதிய அடனம் (Excursion) என்பன போன்றவை முதற்கொண்டு கோவைகள். தூதுகள், மடல்கள் போன்ற பிரபந்தங்கள் ஈருகப் பலபல நூல்களைச் சேர்க்க வேண்டும்.

"வேதப்பொருளை விரகால் விரித்து உலகோர் ஓதத் தமிழால்" - திருவள்ளுவனர் உரை செய்த திருக்குறளை எவ் வகுப்பில் சேர்க்கலாம்?—அதுவே அறநூல்—அதுவே ராஜதந்திர சாஸ்திரம் — அதுவே இன்பநூல்! அவரோடு சேர்த்துச் சில ஆசிரியர்களைச் சொல்லவேண்டுமானல் – ஆயினும் அந்தரம் நீளிது அம்மா! – பேகனையும் (Bacon) கொன்புங்ஸு (Confucius) லாவோத்ஸு (Laotze) முதலிய சீனத்து மகான்களையும் ஸாதியையும் (Sadi) ஹாபிஜையும் கபீரையும், எமர்ஸனையும் தான் (Emerson) சொல்லலாம்.

இதன் பிறகு தனிப்பாடல்களைக் கவனிக்கலாம். ஒவ்வோர் கவியும் ஒவ்வோர் அமையத்தில் பாடிய இவை எண்ணிறந்தன. சில கவிகளினுலேயே மாலைக்கிரமமாக தொகுக்கப்பட்டனவாகும் மற்றும் சில, மதுரைச் சங்கம் போன்ற அவையினராலும் மற்றவை எழுத்தாளராலும் பிரசுரக்காரர்களுமே தொகுக்கப்பட்டனவாகும்.

பதிற்றுப்பத்து, கலித்தொகை, புறநாநூறு, குலிஸ்தான், போஸ்தான் முதலிய இன்சுவை நிறம்பிய பாட்டுக்களை எத்தனைமுறைப் படித்தாலும் தெவிட்டாது. இங்கிலாந்து முதலிய மேனுடுகளில் அவ்வக்கவிஞன் பாடிய தனிப்பாக்களை அவனுடைய காவியங்களோடு சேர்த்துத் தொகுத்து அச்சிடுகிறுர்கள். அச்சிடும் முறை கண்டுபிடிக்க வெகு நாட்களுக்கு முன்னரே நமது தமிழ்ப்பாக்கள் தொகுக்கப்பட்டு போயினமையால், தொகுத்தோர் சிறந்தவையென மதியாத ஒவ்வோர் கவியினுடையவும் பலபாக்கள் இறந்து போயிருத்தல் வேண்டும். ஆனுல் மிகுதியாய் உள்ளவை அபரியாத்தமானஸுகத்தைத் தருவதால் தொகுத்தவருக்கும் இத்தொகை நூல்களாகிற விலையில்லா பொக்கிஷத்தை நமக்குப் பதனப்படுத்தித் தந்திருக்கும் நம் பண்டிதர் பரம்பரைக்கும் நாம் என்றும் மறவா நன்றியைச் செலுத்தவேண்டும்.

கணிதம், ஜோதிஷம், ரஸாயனம். யோகம், முதலிய சாஸ்திரங்களைப் பற்றிய நூல்களைக் குறித்து இங்கு நாம்

பேசுவதாக உத்தேசிக்கவில்லை. இலக்கிய நூல்களைப் பற்றி மாத்திரம்தான் பேச எடுத்துக் கொண்டோம். ஆகையால் காவியங்களைக் குறித்துச் சொன்னது போதும் என்று இவ்வளவுடன் நிறுத்திக்கொண்டு உரைநடை நூல்களைப்பற்றிப் பேசி இவ்விஷயத்தை முடிப்போம்.

ஸமஸ்கிருதத்திலாகட்டும், தமிழிலாகட்டும் இக்காலத்துச் சுவையைத் திருப்தி செய்யக்கூடிய பழைய வசன நூல்கள் கிடையா. உபநிஷத்ப்ராமணங்களையும் நடை அழகாயிருந்தாலும் சங்கராச்சாரியர் முதலிய பாஷ்யக்காரர்களின் பாஷ்யங்களையும் சேனாவரையர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர் முதலியோரின் உரையையும், நக்கீரர் அகப்பொருளுக்குச் செய்த உரையையும் வசன நடைக்கு இலக்கியங்களாக எடுத்துக்கொள்ளக்கூடாது. சில உபநிஷத்துகள் பொருள் செறிந்து கம்பீரமான நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால், உயர்ந்த, அழகிய, ஓட்டமுள்ள வசன நூல்களைப் பார்க்க வேண்டுமானால் கிரேஸிக்கும் (Greece) ரோமுக்கும், அரேபியாவுக்கும், பாரஸீகத்துக்கும் நவீன ஐரோப்பாவுக்கும்தான் போகவேண்டும். எரோதோத்தன் (Hero dotus) உடைய சரித்திரத்தின் மழலை மிக இனிமையாக இருக்கும் என்று சொல்லுகிறார்கள். ஆனால், சரித்திர நடையில் திட்பமும், செறிவும், அனுபவிக்க வேண்டுமானால் தூகுதீதன் (Thucydides) என்னும் கிரேக்கனிடமும், தாஸிதன் (Tacitus) என்னும் ரோமனிடமும் தான் செல்லவேண்டும். தூகுதீதனுடைய பெலப்பனேஸிய யுத்தம் (Pelopponnesian War) என்ற நூலாகிற விஸ்தாரமான படச்சீலையில் எத்தனை மகான்களுடைய உருவங்கள், எத்தனை சைனியங்களின் வியூகங்கள், எத்தனை சபைகள் சித்தரிக்கப்பட்டு விளங்குகின்றன! அகேஸிலன் (Acacius), ஆல்கிபியாதன், கிளியோன் (Cleon), பீதியன் (Phidias), பிராக்ஸிதலன் (Praxi teles), எஸ்கூலன் (Aeschylus), ஸோபாகிளான் (Sophocles), ஸொக்ராத்தன் (Socrates), பிளாத்தன் (Plato), முதலிய இணையற்ற வீரர்கள், சிற்பிகள், கவிகள் தத்துவக்ஞர்கள் ஆகிய

இவர்களின் படங்களையும், இவர்களெல்லவருக்கும் நடு நாயகமாக விளங்கிய ராஜதந்திரியும், தேசபக்தனும், ரஸிகனும், மனித இருதயமாகிற வாத்தியத்தை தன் நாவன்மையால் தன்மனத்துக்கிஷ்டமான வழிகளில் முரலச் செய்யவல்ல வாக்மியுமான பெரிகிளன் (Pericles) உடைய, கம்பீரமான தோற்றத்தையும் அதனுள்ளே கண்டு ஐரோப்பியர் ஆண்மையும் உற்சாகமும் ராஜதந்திர அறிவும் பெற்று வருகிறார்கள். பாரஸீக பாஷையிலுள்ள மொகலாயர் சரித்திரத்தைப்படித்துவிட்டு தெகின் என்னும் பிரஞ்சுக்காரன் பிற்பட்ட சரித்திராசிரியர்களுக்கெல்லாம் முதநூலாக இருக்கும்படி அழகியதோர் சரித்திரம் எழுதிவைத்திருக்கிறான்.

ஆனால், மேற்கு உலகையெல்லாம் ஓர் கவிகைக்கீழ் ஆண்டு வந்த ரோமாபுரியின் மகோன்னதமான ஏகாதிபத்யம் மெல்லமெல்லச் சாய்ந்து வந்து கடைசியில் உலகெல்லாம் நடுநடுங்கும்படி பூமியில் தகர்ந்து வீழும் பிரளய காலத்து இடியோசைப் போன்ற பேரொலியை கேட்க விரும்புகிறவர்கள் – மொங்கோலியாவிலும், துருக்கிஸ்தானத்திலும், குர்திஸ்தானத்திலும் அராபிஸ்தானத்திலும், பாக்திரியாவிலும், பார்த்தியாவிலுமுள்ள பல்வேறு வகைப்பட்ட ஆஸிய ஜாதிகள் அஷ்டதிக்கஜங்களும் நடுங்கும்படி, வானமும் பூமியும் அதிரும்படி, அக்ஷௌகினி, அக்ஷௌகினியாய் ஆஸியாவிலும், ஐரோப்பாவிலும் சென்றதோர் "துமல்" தை (Tumult) சாக்ஷாத்கரிக்க விரும்புகிறவர்கள் - கிப்பனுடைய (Gibbon) ரோம ஏகாதிபத்யத்தின் தேய்வும் வீழ்ச்சியும் (Decline and fall of Roman Empire) என்ற புராணத்தைப் படிக்கவேண்டும். இன்னும் குரோத் எழுதிய கிரேக்க சரித்திரமும் நிபூரும் (Neibuhr) மோம்ஸென் (Theodore Mommson) எழுதிய ரோமர் சரித்திரமும், பிரீமன் (Edward Augustus Freeman), கிரீன் (John Richard Green) மக்காலேயும் (Thomas Babbington Macaulay) எழுதிய ஆங்கில சரித்திரங்களும், தியேரும் தியெரியும் (Adophe Thiere and Augustine Thierry) எழுதிய

பிரெஞ்சு ராஜப்பிரளயச் சரித்திரங்களும் எத்தனையோ ரஸிகர்களுக்கு ஆனந்தத்தையும் ராஜதந்திரிகளுக்கு நல்ல பாடங்களையும் உதாரணங்களையும் தந்துவருகின்றன.

ஆனால் சரித்திர ஜாதியில் எம்முடைய மனதுக்கு மிகவும் உகந்த நூல் கார்லைல் (Carlyle) எழுதிய பிரஞ்சு ராஜப்புரட்சி சரித்திரமே இது தவிர ஐரோப்பியர் இலக்கியசரித்திரங்கள் என ஓர்வகை நூல்கள் எழுதிவருகின்றார்கள். ஐரோப்பாவிலுள்ள ஒவ்வோர் பாஷையிலும் அவ்வப்பாஷையில் தோன்றியுள்ள நூல்களின் விவரம் நிறைந்த சரித்திரத்தோடு மற்ற பாஷைகளிலுள்ள நூல்களின் சரித்திரங்களையும் ஆசிரியரின் சரித்திரங்களையும் விரிவாகக் காணலாம். தேயின் (Taine) என்பவன் பிரெஞ்சில் இங்கிலீஷ் இலக்கியச் சரித்திரம் எழுதியிருக்கிறான். ஹாலம் (Henry Hallam) என்னும் ஆங்கிலென் மத்திய யுகம் என்று சொல்லப்படுகின்ற ஓர் ஐநூறு வருஷ காலத்துள் ஐரோப்பாவில் தோன்றிய சிறந்த காவியங்களின் சரித்திரத்தையும் அவைகளின் விமரிசனங்களையும் கற்றோர்க்கோர் நல்விருந்தாகும்படி எழுதியிருக்கிறான். இவை மாத்திரமா? இந்தியாவிலுள்ள சமஸ்த பாஷைகளிலும் தோன்றியுள்ள நூல்களின் விவரங்களை அறிய வேண்டுமானால், ஜெர்மன், பிரெஞ்சு. ஆங்கிலம், ருஷியன், முதலிய பாஷைகளில் ஏதாவது ஒரு பாஷையைப் படித்தால் போதும் பாலி, ப்ராக்ருதம். பைசாசம், வ்ரஜ பாஷை முதலிய தற்போது வழக்கில் இல்லாத பாஷைகளின் இலக்கியங்களைக்கூட ஆங்கிலம் முதலிய மேல் நாட்டுப் பாஷைகளைப் படித்து அறிந்துகொள்ளலாமானால், ஐரோப்பிய கல்விமான்களின் கல்வி அபிமானம் எத்தகையதாக இருக்கவேண்டுமென்று இதைப்படிப்போர் நாம் சொல்லாமலே அறிந்துகொள்வர்.

ஐரோப்பாவில் ஏதாவது ஒரு வழியில் புகழ்பெற்றவர்களுடைய சரித்திரங்கள் வெகு நாட்களாக எழுதப்பட்டு

வருகின்றன். வீரர்கள், ராஜதந்திரிகள், அர்த்தசாஸ்திர நிபுணர்கள், தேசபக்தர்கள், முதலிய பல்லாயிரம் மஹான்களுடைய சரித்திரங்களை ஐரோப்பிய பாஷைகளில் காணலாம். இத்தகைய நூல்களுள் நடுநாயகமாக விளங்குவது பாஸ்வெல் (James Boswell) எழுதிய ஜான்ஸன் சரித்திரமாகும் சில மனிதர் தங்கள் சரித்திரங்களைத் தாங்களே எழுதியுமிருக்கிறார்கள், இத்தகைய ஆத்ம சரித்திரங்களில் மிகப்பேர்போனவை ஜூலியகேஸரி (Julius Ceasar) எழுதிய காலிய சண்டையும் (Gallic war) நப்போலியன் எழுதிய யுத்த சரித்திரமும் கஅதேயும் (Goethe) பென்வெனுதோ ஸெல்லினி (Benvenuto Cellini) என்றும் பொற்கொல்லனும் எழுதி வைத்திருக்கும் ஆத்ம சரித்திரங்களும் ஆகும் நப்போலியனுடைய வாக்குக்கு அவனது பீரங்கி குண்டுகளின் திண்மையும் லக்ஷயமும் பொருந்தி இருக்கின்றன என்று ஸாந்த் பவ (Sainte Beuve) என்னும் இலக்கணாசிரியன் கூறுவன். இம்மஹான்களின் சரித்திரங்களைப் படிக்கும்போது அவர்களுடனேயே வஸித்து அவர்களுடைய வாழ்க்கையையும், மன வளர்ச்சியையும், நேரே பார்த்து அனுபவிப்பதுபோல் இருக்கும்.

வியாஸங்கள் என்று ஐரோப்பாவில் ஓர்வகை நூல்கள் இருக்கின்றன. அவை ஒவ்வோர் தனி விஷயத்தைப் பற்றிப் பொழுது போக்குக்காகவோ அல்லது அறிவு வளர்ச்சிக்காகவோ ஒவ்வோர் ஆசிரியன் தான் கண்டதையும் கேட்டதையும் கருதியதையும் சிறியதோர் அளவில் விஸ்தரித்து எழுதி வைத்த பிரபந்தங்கள் ஆகும். அவற்றின் அளவு சுமார் ஓராயிரம் வார்த்தைகள் முதற்கொண்டு நூறு பக்கங்கள் வரையிலும் இருக்கும். இந்த வியாஸங்களில் ஹாஸ்ய ரஸத்தை பெய்து எழுதுவதில் அதிஸனும் (Addison), கோல்த்ஸ்மித்தும் (Goldsmith), லாம்பும் Charles Lamb) பேர் போனவர்கள். பேகனுடைய (Francis Bacon) வியாஸங்கள் என்னும் அரிய நூல் சொற்செறிவிலும் பொருட்செறிவிலும் திருவள்ளுவரின்வாக்குக்கு ஒப்பிடக்கூடியவை என்று ஏற்கனவே கூறியுள்ளோம்.

வரும்

2 – 4 – 1981

ஸ்ரீ வ. வே. ஸு. ஐயர்

அவர்களின்

நூருவது ஆண்டு நிறைவு நாளாகும்,
அதனைச் சிறப்பாக நாட்டின்
பல பகுதிகளிலும் கொண்டாடிட
ஏற்பாடுகள் நடைபெற்று
வருகின்றன.

ஜோதி பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி-2.